இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.11.2023) திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கி.கார்த்திகேயன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, அறங்காவலர் குழுத்தலைவர் இரா.ஜீவானந்தம், இணை ஆணையர்கள் அர.சுதர்சன், திருமதி.சி.ஜோதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், குறிஞ்சிப்பாடி மகளிர் திட்டத்தின் சார்பாக தையல்குணம்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனாக ரூபாய் 98 லட்சமும் ,மேலபுதுப்பேட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூபாய் 98 லட்சமும் ,பூதம்பாடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூபாய் 50 லட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 2 கோடியே 46 லட்சம் வங்கி பெருங்கடனாக வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.நாராயணசாமி, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவஞான சுந்தரம் ராமச்சந்திரன், வட்டார இயக்க மேலாளர் சத்தியநாதன், வாழ்ந்து காட்டும் திட்ட வட்டார செயல் அலுவலர் மணிமாறன், வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், வடலூர் நகர கழக செயலாளர் தமிழ்ச்செல்வன், குறிஞ்சிப்பாடி பேரூராட்சித் தலைவர் கோகிலாகுமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராமர், குறிஞ்சிப்பாடி பேரூர் கழக செயலாளர் சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம் – தக்கலை

அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ரூ.26 இலட்சம் மதிப்பில் புதிய புத்தகக் கூடம்!

அமைச்சர் த.மனோ தங்கராஜ் திறந்து வைத்தார்!

கன்னியாகுமரி, நவ. 17-

கன்னியாகுமரி மாவட்ட பொதுப்பணித் துறை சார்பில் தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட புத்தக கூடத்தினை பால் வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், திறந்து வைத்து பேசுகையில்;-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆட்சிப்பொறுப்பேற்ற நாளிலிருந்து பொதுமக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து பிற மாநிலங்களே வியந்து பாராட்டும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள் குறிப்பாக அனைத்து பகுதிகளிலும் சாலை வசதிகள், குடிநீர் வசதி, ஏரி குளங்களை தூர் வாரும் பணிகள், மகளிருக்கென கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம், பள்ளி கல்லூரிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு தேவையான புதிய கட்டிடங்கள், புதிய நூலகங்கள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட ஏராளமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ரூ.26 இலட்சம் மதிப்பில் புதிய புத்தக கூடத்தினை மாணவர்களின் பயன்பாட்டுக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.மாணவர்களுக்கு எந்தத் துறையில் ஆர்வமோ அந்த துறையை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும் அதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஊக்குவிக்க வைக்க வேண்டும் இந்த பள்ளியில் திறந்து வைக்கப்பட்டுள்ள புத்தகக் கூடத்திற்காக நான் 100 புத்தகங்களை வழங்க இருக்கிறேன். இதேபோல் இந்த பள்ளியில் ஆசிரியர் பெருந்தகைகள் ஒருவருக்கு இரண்டு புத்தகம் வீதமும் மாணவர்கள் முடிந்த அளவுக்கு ஒருவருக்கு ஒரு புத்தகமும் இந்த பள்ளிக்கு வழங்கி அந்த நூலகத்தை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் .மேலும் புத்தகங்கள் வழங்க முடியாத மாணவர்கள் பட்டியலை கொடுத்தால் அவர்களது பேரில் நான் புத்தகம் வழங்குகிறேன் என்றும் தெரிவித்தார். தமிழ்நாடு அரசு இரு மொழி கொள்கை கொண்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள் ஒரு மொழி நாம் தாய்மொழி தமிழ் மற்றொரு மொழி உலகம் நாடு முழுவதும் பேசப்படும் ஆங்கில மொழி ஆங்கில மொழியை நீங்கள் தெளிவாக கற்றுக் கொண்டால் உலகத்தில் எந்த நாட்டிற்கு சென்றாலும் நீங்கள் பேசுவதற்கு உறுதுணையாக இருக்கும் அதே போல் தாய் மொழியும் நாம் மறந்துவிடக்கூடாது தமிழ் மொழி மிக தொன்மையான மொழி என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் ஆபிரகாம் லிங்கன் என்ற பெரிய மேதை தெருவிளக்கில் இருந்து தான் படித்து மேதையாளர் அதே போல் நீங்களும் கல்வியில் ஆர்வம் கொண்டு படித்து முன்னேற வேண்டும் நூலகங்கள் மூலமாக தான் நாம் பொது அறிவை பெற முடியும். அண்ணா கலைஞர் போன்ற அறிஞர்கள் புத்தகங்கள் படிப்பதிலேயே தமது காலத்தை அதிக நேரம் செலவு செய்தார்கள் புத்தகங்களாக மாறினார்கள் எனவே இங்கு திறக்கப்பட்டுள்ள இந்த நூலகத்தை பயன்படுத்தி நீங்கள் பொது அறிவு பெற்று கொள்ள வேண்டும் நமக்கு நாமே என்ற அடிப்படையில் இந்த நூலகத்தில் புத்தகங்களை நிரப்புவதற்கு நீங்களும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .பாலதண்டாயுதபாணி, மாவட்ட கல்வி அலுவலர் (மார்த்தாண்டம்) .மாரிமுத்து, பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு) இந்திரா பத்மநாபபுரம் நகர் மன்ற தலைவர் . அருள் சோபான்,. நகர்மன்ற ஆணையர் லெனின் அரசு வழக்கறிஞர் ஜெகதேவ் திமுக தலைமை செயற்குழுஉறுப்பினர்ரெமோன் உள்பட தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், உள்ளாட்சி பிரிதிநிதிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வர வேண்டும்!

தொழில் முனைவோருக்கு அழைப்பு!

கரூர், நவ. 17-

ஜவுளித்துறையில் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்த அரசு செயல்படுத்திவரும் பல திட்டங்களுள் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா அமைக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்த பட்சம் 3 ஜவுளி உற்பத்தி தொழிற்கூடங்கள் அமைக்கப்படவேண்டும். தகுதி வாய்ந்த திட்ட மதிப்பீட்டில் (பொது உள்கட்டமைப்பு வசதிகள் பொது பயன்பாட்டிற்கான கட்டிடங்கள்) 50 சதவீதம் அல்லது ரூ 2.50 கோடி இவற்றில் எது குறைவானதோ அது தமிழ்நாடு அரசின் மானியமாக வழங்கப்படுகிறது.

தற்போது தொழில்முனைவோரின் கோரிக்கையைத் தொடர்ந்து, தகுதி வாய்ந்த திட்ட மதிப்பீட்டில் ஜவுளி தொழிற்கூடங்கள் அமைப்பதற்கான கட்டிடங்களையும் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் அமைத்து நடுத்தர நிறுவனங்களின் மூலம் வளர்ச்சி ஏற்பட்டு வேலைவாய்ப்பு பெருகும். மேலும், அதிகளவில் அந்நிய செலாவணி ஈட்டுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

எனவே சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா அமைக்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளை அனைத்து மாவட்டங்களிலும் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் வேலைவாய்ப்புகளை பெருக்கவும் அனைத்து தொழில் முனைவோரும் முன்வர வேண்டும் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பொருள் தொடர்பாக ஆலோசிக்கும் பொருட்டு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் எதிர்வரும் 24.11.2023 அன்று பிற்பகல் 04.00 மணியளவில் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியினை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மண்டல துணை இயக்குநர், துணிநூல்துறை, மண்டல துணை இயக்குநர் அலுவலகம், எண். 30/3, நவலடியான் வளாகம் முதல் தளம், தாந்தோணிமலை, கரூர்-639 005.

தொலைபேசி எண் : 04324- 299 544,+91-9843212584

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு உலக முதலீட்டாளர் மாநாடு 2024 குறித்த மாவட்ட பெருந்திரள் கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க..பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டக் கழகப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைத் தலைவர் ஷீலாஸதேவி சேரன், நகர மன்றத் தலைவர் ச.தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

வடகிழக்குப் பருவமழை:

சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு மையம்!

ஆணையாளர் ஜெ.இராதாகிருஷ்ணன் ஆய்வு!

சென்னை, நவ.17-

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், 15.11.2023 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் வடகிழக்குப் பருவமழை தொடர்பாக பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களும் இதுகுறித்து களஆய்வுகள் மேற்கொண்டு, நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளையும், இதரத் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் விரைவாக மேற்கொள்ள அறிவுறுத்தியதன் அடிப்படையில் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டுள்ளது.

மேயர் அவர்களும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களும் புதிதாக மேம்படுத்தப்பட்ட சென்னை மாநகர பேரிடர் மேலாண்மை திட்டத்தினை வெளியிட்டு, இது குறித்து பல்வேறு ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தியுள்ளார்கள்.

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் 14.11.2023 அன்று முதல் பரவலாக குறிப்பாக கோடம்பாக்கம், அடையாறு, திரு.வி.க.நகர் போன்ற பகுதிகளில் கனமழை பெய்தது. பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, பேரிடர் மேலாண்மைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள காரணத்தினாலும் பெரும்பாலான மழைநீர் தேங்கும் இடங்களில் தற்பொழுது மழை நீர்த்தேக்கம் காணப்படவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்ந்து பெய்யும் மழையினை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தயார்நிலையில் உள்ளது. இந்தப் பணிகளை இரவு பகலாக மேற்கொள்ள மேயர், துணை மேயர், ஆணையாளர், கூடுதல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர், துணை ஆணையாளர்கள், இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ள மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோர் பணிகளை பகிர்ந்து செய்யும் வகையில் குழுவாக செயல்பட்டு வருகிறோம்.

மேலும், தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி/இளநிலைப் பொறியாளர்கள் ஆகியோருக்கு பணிகளை பிரித்து கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகியோரும் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களிடமிருந்து வரும் மழைநீர்த் தேக்கம், மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகள் உள்ளிட்ட புகார்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை பெரிய அளவிலான புகார்கள் பெறப்படவில்லை. தனிப்பட்ட வீடுகளின் முன்பு நீர்த்தேக்கம் தொடர்பாக 276 புகார்களும், தெருவிளக்குகள் தொடர்பாக 97 புகார்கள், மரம் மற்றும் கிளைகள் விழுதல் தொடர்பாக 16 புகார்கள், கழிவுநீர் வெளியேறுதல் தொடர்பாக 5 புகார்கள், மின்சாரம் இல்லாதது தொடர்பாக 4 புகார்கள் உள்பட என மொத்தம் 401 புகார்கள் பெறப்பட்டு, 107 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்று சேதமடைந்த சாலைகளை சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதிகப்படியாக பெருங்குடி மண்டலத்தில் 56 புகார்கள், கோடம்பாக்கத்தில் 50 புகார்கள், அண்ணாநகர் மண்டலத்தில் 49 புகார்கள், இராயபுரம் மண்டலத்தில் 42 புகார்கள் உள்ளிட்ட 401 புகார்கள் பெறப்பட்டுள்ளது.

கழிவுநீர் வெளியேறுவது தொடர்பான புகார்களுக்கு கழிவுநீர் வாரியத்துடன் இணைந்து செயல்படவும், மின்பெட்டி தொடர்பான புகார்களுக்கு மின்சார வாரியத்துடன் இணைந்து செயல்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மழையில் மக்கள் பிரதிநிதிகள், அலுவலர்கள் அனைவரும் பகுதிகள் வாரியாக பிரித்து பணிகளை மேற்கொண்டு மாநகராட்சியுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். மேலும், அடுக்குமாடிப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு நலச் சங்கங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் குழுவாக இணைந்து செயல்படுவதால் பணிகள் விரைவில் முடிக்கப்படுகிறது.

கடந்த வருட மழையின் போது மழைநீர்த் தேக்கம் காணப்பட்ட 85 இடங்களில் இந்த முறை மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய மழையில் மழைநீர் தேங்கும் இடங்கள், மழைநீர் தேக்கத்திற்கான காரணங்கள் ஆகியவற்றை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

426 சதுர மீட்டர் பரப்பளவிலான பெருநகர சென்னை மாநகராட்சியில் 388 கி.மீ. நீளத்திற்கு 471 பேருந்து தட சாலைகள், 5,270 கி.மீ. நீளத்திற்கு 34,640 உட்புறச் சாலைகள் என மொத்தம் 5,658 கி.மீ. நீளத்தில் 35,111 சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகளில் மழைநீர்த்தேக்கம் இல்லை. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அத்தியாவசியப் பணிகளான குடிநீர் மற்றும் கழிவுநீர், மழைநீர் வடிகால் அமைத்தல், மின்சார வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் போன்ற பல்வேறு பணிகளில் மேற்கொள்ளப்பட்ட சாலை வெட்டுக்களின் காரணமாக தண்ணீர் தேங்கியிருந்தது. இந்தப் பகுதிகளில் தண்ணீர் தேங்கிய இடங்கள், தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கும் மனைகள் கண்டறியப்பட்டு மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். டிராக்டர்களுடன் கூடிய 150 மோட்டார் பம்புகள் பணியாளர்களுடன் கூடுதலாக தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களுக்கு பயன்படுத்தப்படும்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பொதுமக்கள் நோய்த் தொற்று பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், 16 சமூக நல மையங்கள் 3 மகப்பேறு மருத்துவ மனைகள்,1தொற்றுநோய் மருத்துவமனை, 140 சுகாதார நல மையங்கள் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கிடும் வகையில் செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமில்லாமல் மழைநீர் தேங்கும் இடங்களில் வாரம் ஒரு முறை மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதோடு, நாளொன்றுக்கு 45 சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகளோடு பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றித்திரிந்த 12 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அத்தியாவசியப் பணிகளுக்காக சில இடங்களில் சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட பணிகள் ஜனவரி மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும், மழை இல்லாத நாட்களில் அந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, ஆகியோர் உடனிருந்தனர்.

மாதவரம் 23வது வட்டத்தில் நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு தலைமையில் பகுதிச் செயலாளர் புழல் நாராயணன் தொடங்கி வைத்தார்.